முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 22.01.2026

O.S. No.71/2018

பிவா,சா-1 தேவதாஸ்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் பிறந்ததிலிருந்தே அழகப்பப்புரத்தில் நான் வசித்து வருகிறேன். பட்டிகை சொத்தை தவிர அந்த ஊரில் வேறு சொத்துகள் எனக்கு உரிமை இருந்தது என்றால் சரிதான். எனக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு 2012 ல் விற்றுவிட்டேன். வேறு சொத்துகள் இல்லை. 65 சென்ட் நிலமாக உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் 961/13, 2 வாதிக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. அது அந்தோணி நாடாரின் வாரிசுகளுக்கு உரிமைப்பட்டதாகும். 961/1 3 ல் எனக்கு அவகாசம் இல்லை என்றால் சரி. 961/2 ல் எனக்கு அவகாசம் இல்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 சீர்திருத்தப்பத்திரத்தில் 961/3 ல் மட்டுமே எனக்கு அவகாசம் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

பிவாசாஆ 1 ஆவணத்தின் தாய் பத்திரமாக 1995 ம் ஆண்டு கிரய பத்திரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் சர்வே எண். 961/3 என்று போட்டுள்ளது என்றால் சரி. அதை பிழைத்திருத்தம் செய்துள்ளோம். சர்வே எண் 961/13, 2 ற்கு வடக்கு பக்கம் ரோடு செல்கிறது என்றால் சரி. 961/3 ற்கு தெற்கு பக்கம் ஒடை செல்கிறது என்றால் சரி. அந்த ஒடையில் வரப்பின் வழியாக வந்து எனது மனைக்கு செல்லலாம் என்றால் சரியல்ல. தெற்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் எடுத்து அடைத்துவிட்டோம் அந்த பக்கம் வழி இலலை. எனது விலை பத்திரத்திலோ, பிழை திருத்த பத்திரத்திலோ வடக்கு பக்கம் உள்ள பாதை சொல்லப்படவில்லை என்றால் சரி.

எனது சொத்திற்கு வடக்கு பக்கதில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட கண்டம் உள்ளது

என்றால் உள்ளது சிறியதாக உள்ளது. முற்றிலுமாக இல்லை. வழக்கு சொத்துகள் அஞ்சுகிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டப்படும் சர்வே வரைபடத்தில் 961/3 ற்கு வடக்கு பக்கம் 961/13, 2 கண்டங்கள் உள்ளது என்றால் சரி. 1ம் வாதியின் கணவர் கேபிள் கனெக்சன் எடுத்து நடத்தி வந்தார் என்றால் சரி. 1ம் வாதியின் கணவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும் . அவர் 09.03.2018 ல் 1ம் வாதியின் கணவர் திடிரென இறந்து போனார் என்றால் அவர் இறந்த விவரம் மட்டுமே எனக்கு தெரியயும. அவர் இறந்த பிறகு வழக்கு சொத்திற்குள் ஏறி 10.03.2018 ல் வழக்கு பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கத்தில் பாதையாக உபயோகித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1998 ல் இருந்து நான் பாதையாக புழங்கி வருகிறேன்.

சித்தியிடம் இருந்து பாதை அவகாசம் தொடர்பாக விலைக்கு வாங்கிய ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாய்மொழியாக கொடுத்தார். எழுதி வாங்கவில்லை. சிறிய அளவிலான ரூ 2 ஆயிரம் தொகையை கொடுத்தேன். எனது சித்தி 2 வருடங்களில் இறந்து விட்டார் அவரிடமிருந்து எழுதி வாங்கமுடியவில்லை. உண்மையில் 961/13, 2 நிலங்களில் எந்த உரிமையும் வாங்கவில்லை என்றாலும் ஆள் இல்லாததை வைத்து நான் அத்துமீறி நுழைகிறேன் என்றாலும் சரியல்ல.

பிவாசாஆ 6 பட்டாவில் 1ம் வாதியின் கணவர் பெயர் உள்ளது என்றால் சரிதான். எனது மாமாவின் அந்தோணி நாடர் மகன் அம்புரோஸ் பெயரும் உள்ளது. இந்த வழக்கில் ஆணையர் இடத்திற்கு வந்து அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தபாக்கல் செய்தார் என்றால் சரி. ஆணையரிடம் நான் விலைக்கு வாங்கியது தொடர்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். எவ்வளவு இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்தேன் என்று தெளிவாக ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தார் என்றார்ல சரியல்ல. நான்

ஆக்கிரமித்துள்ள இடத்தில் கேட்டிற்காக தூண் வைத்துள்ளேன் என்றால் 961/2 ல் கேட்டிற்கான தூண் வைத்துள்ளேன். 961/2 ல் கேட் அமைக்கவோ, பாதை அவகாசமோ எனக்கு எந்த காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல. 1995 ம் ஆண்டு தாய் பத்திரத்தை என் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தாத்தா தொலைத்துவிட்டார்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாசாஆ 6 ஆவணம் 1995 ல் நான் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். தற்போது அது வாசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உண்மையில் 2006 ல் இருந்து வாதிகள் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதில் எனக்கு எந்த அவேகாசமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை இடித்து மாற்றி தர வேண்டும் என்றால் சரியல்ல.

நான் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை ஒழிப்பித்து இடத்தை மீட்டு பெற வாதிகள் தகுதியுடையவர்கள் என்றால் சரியல்ல.